**OS. 52/2022**
**நாள். 20.01.2026**
**பி.வா.சா. 1 – சொக்கநாதன் த/பெ.முத்துராமலிங்கம்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>

நான் மாதம் எவ்வளவு சம்பாதித்து வருகிறேன் என்றால் தற்போது எனக்கு எந்த வருமானமும் இல்லை. நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2020ம் வருடம் வரை தாக்கல் செய்துள்ளேன். அதன் பிறகு தாக்கல் செய்யவில்லை. தாவா அடமானகடன் சொத்தில் உள்ள சொத்தில் யார் தற்போது இருந்து வருகிறார்கள் என்றால் வாடகைதாரர்கள். ஒவ்வொரு வாடகைதாரரும் எவ்வளவு வாடகை கொடுத்து வருகிறார்கள் என என் எதிர்வழக்குரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தனலெட்சுமி டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் வாடகைக்கு இருநதுவரும் நபர் மாதம் ரூ.8 ஆயிரம் வாடகை செலுத்தி வருகிறார். தனலெட்சுமி டெக்ஸ்டைல்ஸ் கடை உள்ள கட்டிடம் இராமநாதபுரம் நகர்ப்புறத்தில் வியாபாரப்பகுதியில் உள்ளது என்றும் கூடுதலான வாடகை கிடைக்கும் என்றும், நான் வழக்கிற்காக ரூ.8 ஆயிரம் என்று குறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு போதுமான வருமானங்கள் இருந்தும் வாதிக்கு செலுத்தவேண்டிய அசலோ, வட்டியோ செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே நெட்பேங்கிங் மூலம் ரூ.13 இலட்சமும், புரோநோட் மூலமாக ரூ.19 இலட்சமும், ரொக்கமாக ரூ.4 இலட்சமும் கொடுத்து அடமான கடன் பத்திரத்திற்கு பின்புறம் எழுதி வாங்கியுள்ளேன். நான் ஏற்கனவே ரூ.36 இலட்சம் செலுத்தியதற்குண்டான ஆவணத்தை செலுத்தவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என ஏற்கனவே கூறியுள்ளேன். எனக்கு போதுமான வருமானம் இருந்தும், 2018ம் வருடத்திலிருந்து அசலோ, வட்டியோ செலுத்தாமல் வாதியை வீண்அழைக்கழிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி பிராதில் கோரியுள்ளவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு கூடுதல் செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.